
*ISSN No. : XXXXXXXXX* *அவையம் 1 (2017) p.no. 66 - 71*

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS



# வள்ளுவத்தில் பிரிவும் பிரிவுத் துன்பமும்

***கா. அன்பரசு,***
***உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,***
***தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர்-635 601.***

***கட்டுரை பெறப்பட்டது: 15.12.2016*** ***ஏற்கப்பட்டது: 05.05.2017***

பொய்யா மொழிப்புலவர் யாத்த வள்ளுவம் சுட்டாத பொருள் இல்லை. வாழ்க்கையில் எழும் கேள்விகளுக்குப் பதிலை நல்கும் விடை வங்கியாக இதுகாறும் செயல்படுகிறது. ஒற்றுமையையும் சான்றாண்மையும் நல்லவற்றையும் நல்லன அல்லாதவற்றையும் சுட்டி அமையும் வாழ்க்கை பெட்டகமாகச் சிறந்து விளங்கும் ஒப்பற்ற உயரிய நூல் திருக்குறள். இவ்வுலகப் பொதுமறை கூறாதவை என எவற்றையும் பட்டியல் இட முடியாது. பொருளின் காரணமாகவோ வாழ்வின் ஏதாவது ஒரு செயலின் காரணமாகவோ இல்லத்தில் பிரிவு ஏற்படுவது இயற்கை. பிரிவின் துன்பம் கொடூரமானது. பிரிவினைப் பற்றியும் பிரிவுத்துன்பத்தைப் பற்றியும் வள்ளுவம் கூறும் சில கருத்துக்களை இவ்ஆய்வு கட்டுரை தர விழைகிறது.

## பிரிவின் அடிப்படை

ஒல்காப் புகழ் பெற்ற தொல்காப்பியம் வாழ்க்கையின் அடிப்படையை களவு, கற்பு என்ற பிரிவுகளாகப் பிரிக்கிறது. தொழில் அடிப்படையில் ஓதல், பகை, தூது எனப் பிரிக்கின்றது. இவையே அன்றி விதி விலக்குகளாகப் பிரிவுகள் பல உள்ளன. எத்தகைய பிரிவாக இருந்தாலும் இல்லறத்தைப் பொறுத்த வரையில் அப்பிரிவானது இல்லக்கிழத்திக்குக் கொடுமையைத் தருவதாக அமைகின்றது. இவ்அடிப்படையில் இன்றைய பிரிவை அணுக முடியாது. இப்பிரிவு எத்தகையது என்பதைப்

புதிய அவையம்

பிரிவாற்றாமை, படர்மெலிந்திரங்கல் ஆகிய இரண்டு அதிகாரங்கள் உணர்த்தி நிற்கின்றன.

### பிரிவின் கொடுமை

இல்லக்கிழத்தித் தன் இல்லான் பிரிந்து செல்வதை விரும்பினாள் இல்லை. ஒருவேளை தலைவன் பிரிந்தால் அவன் மீண்டும் வரும் வரையில் தன் உயிர் கூட மிஞ்சாது என எண்ணுகிறான். எனவே, பிரிந்து செல்லாத செய்தி இருந்தால் தனக்குக் கூறும் படியாகவும் பிரிந்து செல்வதாக இருந்தால் மீண்டும் வரும் வரையில் யார் உயிரோடு இருக்கிறார்களோ அவர்களுக்குக் கூறும் படியாகவும் தலைவி கூறுகிறாள். இதையே,

**செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க்கு உரை (குறள் - 1151)**

எனக் குறள் கூறுகிறது. மேலும், இக்குறட்பா இல்லாள் இல்லானின் மீது வைத்திருக்கும் அன்பைக் காட்டுவதாக அமைகிறது. பிரிவு என்ற கொடுஞ்செயலை என்னும் போது அவனது எச்செயலும் தனக்குத் துன்பம் தருவதாகவே கருதுகிறாள். பிரிவு என்ற சொல்லையும் தாங்கவியலாத ஒரு மனநிலையை அவள் பெறுகிறாள். இதையே,

**இன்கண் உடைத்து அவர் பார்வல பிரிவு அஞ்சும் (குறள் - 1112)**

என்ற வரிகள் வழி இல்லாள் இல்லானின் மீது வைத்திருக்கும் மிதமிஞ்சிய அன்பைக் காட்டுவதாக அமைகின்றது.

### பிரிவு எண்ணம்- இல்லாளின் புலம்பல்

பிரியேன் என்று அவன் கூறிய வார்த்தையைக் கூட நம்பமுடியவில்லை என்ற ஓர் ஆழமான எண்ணத்திற்கும் இல்லாள் செல்வதுண்டு. அவள் அன்பு செய்த காலத்தில் அஞ்சாதே என்று கூறியவர், பிரிவதனால் ஏற்படும் அச்சத்தை நீக்கியவர், இப்பொழுது பிரிந்தார். அவர் மீது வைத்த நம்பிக்கை வீணாகின்றது என்று தலைவி எண்ணுகிறாள். அவள் பிரிந்து மீண்டும் வந்து கூடினால் அது மிகவும் அரியதாகும். மேலும், பிரிவு பற்றி என்னிடம் கூறிக் கொண்டிருந்தால் அவர் மீண்டும் வந்து இன்பம் தருவார் என்ற நம்பிக்கை இல்லை. ஆசையும் இல்லை என இல்லாள் புலம்புகிறாள். தொடர்ந்து, அவன் பிரிவதனால் கரங்கள் மெலிந்து வளையல்கள் கழன்று விழும் என ஊரார்க்கு அஞ்சுகிறாள் கிழத்தி. இப்படிப்பட்ட அவள் புலம்பலை,

***ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல் மற்றுஅவர்***

***நீங்கின் அரிதால் புணர்வு (குறள் - 1157)***

***துறைவன் துறந்தமை தூற்றாடுகால் முன்கை***

***இறை இறைவா நின்ற வளை (குறள் - 1157)*** *முதலிய கருத்துக்கள் விளக்கி நிற்கின்றன.*

***பிரிவு வலியின் உச்சம்***

*கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு. மக்களின் ஆன்மீக வாழ்வு நெறிக்கு எவ்வாறு தெய்வ பக்தி அவசியமோ அவ்வாறே இல்லற நெறிக்கும் தலைவனின் அன்பு அவசியம் என்பதைத் தலைவி உணர்கிறாள். எனவே, தலைவன் பிரிந்தால் தன்னை ஆற்றுப்படுத்துவதற்கும் தேற்றுதலுக்கும் ஒரு தோழி இல்லாது இருப்பது கொடியது என்பதையும் அவள் உணர்கிறாள். தன் இல்லாளைப் பிரிந்து இரப்பது அதைவிடக் கொடுமையானது என்பதையும் அவள் மறக்கவில்லை. இதையே வள்ளுவம்,*

***இன்னாது இனன் இல்உளர் வாழ்தல் அதனினும்***

***இன்னாது இனியார்ப் பிரிவு (குறள் - 1158)*** *என்கிறது.*

*ஏதோ ஒரு சூழல் காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரியும் நிலை ஏற்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. குடும்ப நலனுக்காகவும் வாழ்க்கை நலனுக்காகவும் பலர் அதை தாங்கிக் கொண்டே தான் உள்ளனர் என்பதை வள்ளுவம் குறிப்பிடுகிறது. பிரிவின் துக்கமும் தலைவன் இல்லாத பிரம்மசாரிய வாழ்க்கையும் தலைவிக்கு ஒரு வெறுமையைத் தோற்றுவித்தாலும் குழந்தைகளுக்காக வாழ வேண்டிய கட்டாயம் இருப்பதால் மகளிர் பலர் உயிரோடு இருக்கின்றனர் என்பதை,*

***அரிது ஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவு ஆற்றிப்***

***பின் இருந்த வாழ்வார் பலர் (குறள் - 1160)*** *இக்குறட்பா விளக்குகிறது.*

***பிரிவு ஒரு நோய்***

*தொல்காப்பியம் பிரிவைப் பற்றி பல கோணங்களில் உணர்த்தும். ஆனால், பிரிவுத் துன்பத்தை அது பெரிதாக உணர்த்தவில்லை. வள்ளுவம் பிரிவுத் துன்பத்தை உணர்த்தி அதன் கொடுமையையும் தலைவி படும் துயரத்தையும் அனுபவ நிலையில் நின்று விளக்குகிறது. பிரிவுத் துன்பத்தைப் பிறர் அறியாதபடி மறைத்து விடலாம். ஆனால், அப்பிரிவுத்துயர் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே செல்வதாய் இருக்கிறது. பிரிவத் துன்பத்தை மூடி மறைத்தாலும் யாரால் அது ஏற்பட்டதோ அவ்வர்க்கம்*

*பெண்மையின் நாணத்தின் காரணமாகத் தூது அனுப்பவும் இயலாது. இத்தகைய இக்கட்டான சூழலை,*

**சுரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு**

***உரைத்தலும் நாணுத் தரும் (குறள் - 1162)*** *என்ற குறட்பா விளக்கி நிற்கிறது.*

***பிரிவுத் துன்பம் ஒரு கடல்***

*பிரிவுத் துன்பம் என்பது ஒரு கடல் போன்றது. அதைக் கடப்பதற்கு எந்தத் தோணியும் பயன்படாது. காதலர் ஒன்றே அப்பிரிவுத் துன்பத்தைக் கடப்பதற்கு அங்கே தோணியாக அமைய முடியும் என்று வள்ளுவம் கூறுகிறது. அதாவது வாழ்க்கை என்னும் கடலை கடப்பதற்குத் தோணியாக விளங்கக் கூடியவன் தலைவன் என்பதை வள்ளுவம் விளக்கி நிற்கிறது. மேலும், தலைவன் கூடியிருக்கும் போது அம்மகிழ்ச்சி கடலளவு பெரிதாகவும் தலைவன் பிரிந்து இருக்கும்போது அத்துன்பம் கடலைவிடப் பெரியதாக இருக்கும் என்று தலைவி கருதுகிறாள். இது உள்ளார்ந்த அன்புடன் இல்வாழ்க்கை வாழும் தலைவியின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. வள்ளுவர் காட்டும் இல்லக் கிழத்தியரின் வாழ்க்கை இவ்வாறுதான் இருக்கும் என்று,*

***காமக் கடல்மன்னும் உண்டே அது நீந்தும்***
***ஏமப் புணைமன்னும் இல் (குறள் - 116)***
***இன்பம் கடல்மற்றுக் காமம் அஃது சுடுங்கால்***
***துன்பம் அதனிற் பெரிது (குறள் - 1166)*** *ஆகிய குறட்பாக்கள் கூறுகின்றன.*

***பிரிவுத்துன்பமும் உளவியலும்***

*தொல்காப்பியம் பிரிவுத் துன்பத்தைச் சூழல் வழி நின்று நூற்பா மூலம் விளக்குகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் இந்நூற்பாக்களுள் சங்க அக இலக்கியங்களில் இருந்தே எடுத்துக்காட்டுகளைக் கூறுகின்றனர். ஆனால் வள்ளுவம் குறள்வழியே தலைவியின் மனநிலையையும் உள்ளப் பாங்கையும் உளவியல் வழி நின்று விளக்குகிறது. தொல்காப்பியர் கூறுகின்ற பிரிவாற்றாமையும் களவு, கற்பு அகிய இரண்டிற்கும் ஒருவேளை பொருந்தி வரலாம். ஆனால் வள்ளுவம் கூறும் பிரிவு விரிவாற்றாமை என்பது கற்புக்கு மட்டுமே பொருந்தும். சங்க இலக்கியங்கள் அகப்பிரிவை கூறும் இடத்துக் கார்காலப் பின்னணியையும் கார்காலத்தில் ஏற்படும் தலைவியின் பிரிவுத் துன்பத்தையும் சுவைப்பட ஆழமாக விளக்குகிறது. ஆனால் வள்ளுவம் காலப் பின்னணியை அடிப்படையாக வைத்து எழுதப்படவில்லை. மாறாக*

பிரிவைப் பற்றி வள்ளுவர் கூறுகின்ற போதே கார்காலச் சூழலை உருவாக்கி விடுகிறார். சங்க அக இலக்கியங்கள் விலங்கினங்களை வைத்தும் பூக்களைக் கொண்டும் பிரிவுத் துயரை உளவியல் நோக்கில் படம் பிடித்துக் காட்டும் வள்ளுவம் இக்கருத்தை மயிரிடை போன்ற கருத்தாகக் கூறிப் பிரிவின் கொடுமையை ஆழப்படுத்திக் காட்டுகிறது. இராக்காலத்தில் உயிர்கள் நிம்மதியாக உறங்குகின்ற போது தான் மட்டும் தனித்து பயத்துடன் விழித்துக் கொண்டிருப்பதாகத் தலைவி உணருகிறாள். மேலும், தலைவன் பிரிந்தபோது மிக நீண்ட பொழுதாய் கழிக்கின்ற இரவுப் பொழுது தலைவனைக் காட்டிலும் கொடியது என வருந்துகிறாள். இவ்வாறு, நினைத்து நினைத்து அழுத வண்ணமே தலைவி இருப்பதாக,

***மண்உயிர் எல்லாம் துயிற்று அளித்துஇரா***
***என் அல்லது இல்லை துணை (குறள் - 1166)***
***கொடியார் கொடுமையின் தாம் கொடிய இந்நாள்***
***நெடிய கழியும் இரா (குறள் - 1169)*** ஆகிய குறட்பாக்கள் கூறுகின்றன.

***நிறைவாக***

இதுகாறும் கண்டவற்றுள் பிரிவு என்பது ஒரு கொடிய நோய் மற்றும் பெரிய கடலும் கூடப் பிரிவு என்பதைத் தலைவியரால் மறைக்க முடியாத ஒரு பொருள் பிரிவு என்பது அதைச் சார்ந்தவர்களை மேன்மேலும் வருத்துகின்ற ஒரு கொள்ளை நோய். தொல்காப்பியர் சுட்டும் பிரிவில் ஆற்றுப்படுத்தும் கருவியாக தோழி செயல்படுகிறாள். ஆனால், வள்ளுவர் கூறும் பிரிவில் தோழிக்கு இடம் இல்லை. பிரிந்து சென்ற தலைவனே மருந்தாகவும் பிரிவாகிய துன்பக்கடலைக் கடக்கும் தோணியாகவும் விளங்குகிறான். காலத்தின் அடிப்படையில் வைத்து வள்ளுவம் கூறவில்லை. ஆனால், தொல்காப்பிய அகத்திணைப் பிரிவுகளுக்கு உரைகண்ட உரையாசிரியர்கள் எடுத்தாளும் சங்க இலக்கிய நூற்கருத்துக்களை இரண்டடியால் வள்ளுவர் கூறியிருப்பது மனம் கொள்ளத்தக்கது. அஃறிணை உயிர்களையும் மலர்களையும் வைத்து அகத்திணைப் பிரிவிற்கு உரையாசிரியர் தந்த விளக்கத்தைக் காட்டிலும் ஆழமான விளக்கத்தை வள்ளுவர் கூறியிருக்கிறார். எவ்வாறு தொல்காப்பியரை உளவியலாளர் எனக் கூறுகின்றமோ அவ்வாறே வள்ளுவரையும்

கூற முடியும் என்பதைப் பிரிவாற்றாமை, படர் மெலிந்திரங்கல் ஆகிய இரு அதிகாரங்களும் உணர்த்தி நிற்கின்றன.

*******

பதிப்பு அவையம்